STATE COURTS
SINGAPORE

HAGAR
The whole journey

COMMUNITY
JUSTICE CENTRE

NUS
National University of Singapore
Centre for Pro Bono
& Clinical Legal Education
Faculty of Law

# நீதிமன்றத்தில் யார் எல்லாம் இருப்பார்கள்?



தங்களின் கதையைச் சொல்ல உதவி
தேவைப்படும் அனைவருக்கும்

உங்கள் குரல் எங்கள்
அனைவருக்கும் முக்கியம்

இந்த வெளியீடு 4 அமைப்புகளின்
ஒரு கூட்டு முயற்சியாகும்.

**State Courts**
1 Havelock Square
Singapore 059724
contact@statecourts.gov.sg
statecourts.gov.sg

**Hagar Singapore Ltd**
8 Lorong 27A Geylang
#03-04, Singapore 388106
singapore@hagarinternational.org
hagar.org.sg

**Community Justice Centre**
1 Havelock Square
Singapore 059724
help@cjc.org.sg
cjc.org.sg

**NUS Centre for Pro Bono & Clinical Legal Education**
NUS Faculty of Law
469A Bukit Timah Road
#07-01 Tower Block
Singapore 259770
probono@nus.edu.sg
law.nus.edu.sg/probono

# நீதிமன்றத்தில் யார் எல்லாம் இருப்பார்கள்?

Copyright © 2018 State Courts & Hagar Singapore Ltd

Adapted from Who Will Be in Court?  Originally produced by Hagar International in conjunction with UNICEF.
Modified for use in Singapore with drawings by Jolie Lim, colouring and digital layout by Wileen Saw.
KBBubblegum font used with the kind permission of Khrys Bosland of Fort Myers, Florida, USA.

All rights reserved.  Printed in Singapore.
These materials may be freely used.

For enquiries and further adaptation, contact any of the partner organisations involved in this project.
ISBN 978-981-11-8954-8

நீதிமன்றத்தில் யார் எல்லாம் இருப்பார்கள்?



நீதிபதி

Page 1



நீதிமன்ற அதிகாரி

Page 5



குற்றம் சுமத்தப்பட்டவர்

Page 9



போலீஸ்

Page 11



அரசு தரப்பு வழக்கறிஞர்

Page 3



தற்காப்பு வழக்கறிஞர்

Page 7



சாட்சிகள்

Page 13



சமூக சேவை ஊழியர்

Page 15

# நீதிபதி

- எல்லோரும் கூறும் கதையைக் கேட்பார். அதன் பிறகு, என்ன நடந்திருக்கும் என்று புரிந்துகொள்ள முயற்சி செய்வார்.
- குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றத்தைச் செய்தாரா அல்லது செய்யவில்லையா என்பதை முடிவு செய்வார்.
- சில சமயம் சாட்சிகளிடம் கேள்விகள் கேட்பார்.
- ஒரு நீளமான கருப்பு ஆடை அணிந்திருப்பார்.
- எல்லோரும் இவரை "யுவர் ஆனர்" என்று அழைப்பார்கள்.





# அரசு வழக்கறிஞர்

- குற்றம் சுமத்தப்பட்டவர் தான் குற்றத்தைச் செய்தார் என்று காட்ட முயற்சி செய்வார்.
- சாட்சிகள் தங்களின் கதையைக் கூறுவதற்காக அவர்களிடம் கேள்விகள் கேட்பார்.
- உயர் நீதிமன்றத்தில் நீளமான கருப்பு ஆடை அணிந்திருப்பார். ஆனால், அரசு நீதிமன்றங்களில் அது போன்ற ஆடை அணிய மாட்டார்.



# நீதிமன்ற அதிகாரி

- நீதிபதிக்கு உதவி செய்வார்.
- நீதிபதிக்கு மிக அருகில் அமர்ந்திருப்பார்.
- நீதிபதிக்கு வேண்டிய பொருள்களை எடுத்து வந்து கொடுப்பார்.



# எதிர் தரப்பு வழக்கறிஞர்

- குற்றம் சுமத்தப்பட்டவருக்கு உதவி செய்யும் ஒரு வழக்கறிஞர்.
- குற்றம் சுமத்தப்பட்டவருக்கு ஆலோசனை வழங்குவார்.
- சாட்சிகள் கூறும் கதை உண்மையா என்று தெரிந்துகொள்ள அவர்களிடம் கேள்விகள் கேட்பார்.
- உயர் நீதிமன்றத்தில் நீளமான கருப்பு ஆடை அணிந்திருப்பார். ஆனால், அரசு நீதிமன்றங்களில் அது போன்ற ஆடை அணிய மாட்டார்.





# குற்றம் சுமத்தப்பட்டவர்

- இவர்தான் சட்டத்தை மீறிவிட்டார் என்று போலீஸ் கூறுகிறது.

- வழக்கு நடக்கும் எல்லா நேரமும் நீதிமன்றத்தில் இருக்கவேண்டும்.





# போலீஸ்

★ நீதிமன்றத்தில் எல்லோரையும் பாதுகாப்பாக வைத்திருப்பார்.

★ நீல நிற சீருடை அணிந்திருப்பார்.



# சாட்சிகள்


- ⋆ நீதிபதியின் முன்னால் அமர்ந்து அவர்களின் கதையைக் கூறுவார்கள்.
- ⋆ குற்றம் சுமத்தப்பட்டவரால் காயம் அடைந்தவரும் இது போன்று சாட்சி சொல்லலாம்.
- ⋆ அரசு வழக்கறிஞரும் மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவரின் வழக்கறிஞரும் இவர்களிடம் கேள்விகள் கேட்பார்கள்.
- ⋆ இவர்கள் உண்மையைப் பேச வேண்டும்.




# சமூக சேவை ஊழியர்

- ★ அதிக உதவி அல்லது ஆதரவு தேவைப்படும் ஒரு சாட்சிக்கு உதவுவார்.
- ★ சாட்சியை நீதிமன்றத்திற்கு அழைத்து வருவார்.
- ★ சாட்சிக்கு உதவி தேவைப்படும் வரை அவர் அருகில் அமர்ந்திருப்பார்.








நீதிபதி
நீதிமன்ற
அதிகாரி
குற்றம் சுமத்தப்பட்டவர்
சமூக சேவை ஊழியர்
சாட்சி
போலீஸ்
அதிகாரி
தற்காப்பு வழக்கறிஞர்
அரசு தரப்பு வழக்கறிஞர்















இப்போது உன் மனதில் என்ன
தோன்றுகிறது என்று
வரைந்து காட்டு.



குறிப்புகள்

# பராமரிப்பாளர்கள் மற்றும் சமூக சேவை ஊழியர்களுக்கான  தகவல்.

இப்புத்தகம், குற்றவியல் நீதி செயல்முறையின் கீழ், குறிப்பாக, குற்றவியல் வழக்குகளில் சம்மந்தப்பட்டிருக்கும், எளிதில்  பாதிக்கப்படக்கூடிய சாட்சிகளுடன்  வேலை செய்யும் அனைவரையும்  ஆதரிப்பதற்காக சிங்கப்பூரில் உள்ள நான்கு அமைப்புகளின் கூட்டு முயற்சியில் தயாரிக்கப்பட்டதாகும்.

மேலும் ஏடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை அல்லது கூடுதல் ஏடுகளை (அவை கிடைக்கப் பெற்றவுடன்) பெற நீங்கள் விரும்பினால், இணை ஆதரவு அமைப்புகளின் இணையத் தளங்களைக் காணவும்.

# அங்கிகாரம்

மூல புத்தகத்தை Hagar International. UNICEF-வோடு இணைந்து தயாரித்தது. இப்புத்தகம் Hagar International. -ன் அனுமதியோடு அம்மூலபுத்தகத்தின் பொருளடக்கத்தைத் தழுவி தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்படைப்பு, மாணவர்களால் வழிநடத்தப்படும் நீதிக்கான அணுகலில் கவனம் செலுத்தும் NUS சட்டத்துறையின் குற்றவியல் நீதி சங்கம் உள்பட, பலருடைய கூட்டு முயற்சியாகும்.



இப்புத்தகத்தின் கதாபாத்திரங்கள்  Jolie Lim என்ற ஒரு Pathlight பள்ளி மாணவியால் வரையப்பட்டன. அவள் கலகலப்பான, புத்திசாலியான, உற்சாகமான மற்றும் அதிக திறன் படைத்தவள்.  Jolie-ன் படைப்புகள் பல, பைகள், T-சட்டைகள், குறிப்பு புத்தகங்கள் மற்றும் இதர பலவகைப்பொருட்களாக உரு பெற்றுள்ளன. அவளது கைவண்ணங்கள் The Art Faculty at Enabling Village அல்லது Ng Teng Fong பொது மருத்துவ மனையில் மனமகிழ்ச்சித்தரும் பொருட்கள் விற்கும் Mustard Tree கடை  ஆகியவற்றில் காணலாம் மற்றும் வாங்கலாம்.